முருகப்பெருமான் துணை

**மகான் பராசரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.12.2022, வியாழக்கிழமை

1. ஞானச்சுடரே ஆறுமுக அரங்கா
ஞானியே உன் பெருமை கூறி
தானதரும பலம் கொண்டநல்
தவசியே அனுகூல ஆசிதனை
2. ஆசிதனை சுபகிருது சிலை திங்கள்
அறிவிக்க சப்தம திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 07 ம் நாள் 22.12.2022, வியாழக்கிழமை)
நேசமுடன் பராசரிஷி யானும்
நிலவுலகம் மேன்மைபெற உரைப்பேன்
3. உரைப்பேன் கலியிடர்கள்தனை
உயர்வான ஞானிகள் தானும்
அறத்தின் வழி அகற்றி வர
அரங்கன் திருவடி பற்றிய மக்களுக்கு
4. பற்றிய மக்களுக்கு பாதுகாப்புடன்
பாருலகில் சர்வபலமும் காணும்
உற்றதொரு தேட்டு தன விருத்தியுடன்
உயர்வும் சிறப்பும் காண்கும்
5. காண்கவே அரங்கன் தருமத்தில்
கணக்காய் பொருளுதவி செய்து
உண்மைபட உடல் உழைப்பும்
உயர் தொண்டாய் செய்து வர
6. வருகவே அவரவரை தொடரும்
வலிய முன்கரும வினைகளும் விலகி
தரும சிந்தை தெளிவுடன்
தயவும் சகல வளமும் கூடும்
7. கூடவே ஞானிகளின் பூசையை
குறைவிலா தொடர்ந்து செய்து
நாடெங்கிலும் தருமம் வளர்க்க
ஞானிகளின் வெளிப்பாடு அதிகமாகி
8. ஆகியே உலகம் எங்கிலும் மாற்றம்
ஆறுமுகனார் ஆசிபட நடக்கும்
அகிலமதில் அரங்கமகான் படை
ஆற்றல்பட பெருகி வருக
9. வருகவே எங்கும் எவற்றிலும்
வளர்ச்சி நிலைகளாக மாறி
தருமபலமும் தணிகாசலன் துணைபட
தரணியே ஞான ஆட்சி காண்கும்

10. காண்கவே இந்தவித மாற்றத்தை
கந்தவேலன் கலியினில் தரவே
ஆன்மீக ஞான அரசியல் களமென
அரங்கன் வழி உருவாக்கி வர

11. வருகவே மக்கள் முழுமைபட
வணங்கி ஏற்று வருக
முருகப்பெருமான் ஞான ஆட்சி
முழுமைதரும் ஞான ஆட்சியாக மலரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–